கள் மிகவும் அவசியமான ஒன்றாகும். பேருந்துகளைப் பார்க்காத கிராமங்களுக்குப் பேருந்துகள் கிடைக்க இப்படிப்பட்ட பாலங்கள் அமைத்துத் தர வேண்டியது அவசியமாக இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தப் பாலத்தை அந்தப் பகுதி மக்களுடைய நலன் கருதி அமைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பாலம் பெரும்நாடு, குன்னையூர் சாலையிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய கூடலூர் ஊராட்சி மன்றச் சாலையினுடைய முடிவிலே அமைந்திருக்கிற இடமாகும். அந்த இடத்திலே ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலே 60 மீட்டர் நீளத்திற்கு அந்தப் பாலம் கட்டப்பட வேண்டும். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏறத்தாழ 7,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு அந்தப் பாலம் கட்டினால் மிகவும் உபயோகமாக இருக்கும் என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே சொன்னது, இந்த ஆண்டு பார்ட்-2 ஸ்கீமிலே அல்லது மற்ற நிலைகளிலே அந்த மதிப்பீடு சேர்க்கப்படவில்லை என்ற காரணத்தாலே சொன்னேன். இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் சாலைகளும், பாலங்களும் கட்டப்பட வேண்டுமென்று நிலை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த பாலத்தை அடுத்த ஆண்டிலேயே எடுத்துக்கொள்வதற்கான முயற்சியை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 66. திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

66

நாமக்கல் புறவழிச்சாலை.

*1735 திரு. எஸ். அன்பழகன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாமக்கல் பகுதியில் போக்குவரத்தினைக் கட்டுப்படுத்த புறவழிச்சாலை (By pass Road) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

டி2 53-329—3

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் பகுதியில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பைபாஸ் சாலை அமைக்க மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் எவ்வளவு செலவில் தயாரிக்கப்படும் என்பதையும், எவ்வளவு தூரம் போட இருக்கிறார்கள் என் பதையும் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் என்பது 1991—92 ஆம் ஆண்டு மைய அரசுடைய பிரிலிமினரி அப்ரூவலுக்கு அனுப்பப் பட்டு கொள்கையளவில் மைய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. அதற்கான இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக நில ஆர்ஜிதப் பணிகளுக்காக இன்றைக்கு 50 லட்சம் ரூபாய் மதிப்பீடு போட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியிருக்கிறோம். அந்த நில ஆர்ஜிதம் சம்பந்தப்பட்ட ஒப்புதலை மைய அரசு கொடுத்த தற்குப் பிறகுதான் இந்தத் திட்டத்தினுடைய உண்மையான மதிப்பீடு தயார் செய்யப்படும். ஆகவே இப்போது இடத்தை ஆர்ஜிதம் செய்வதற்காக ரூ. 50 லட்சம் செலவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு மைய அரசு ஒப்புதல் கொடுத்தவுடனேயே அந்த சாலைக்கான மதிப்பீடு தயார் செய்யப்படும். அதற்கான மதிப்பீடு என்ன என்பதை பின்னர் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

திரு. எஸ். அன்பழகன் : லாரி தொழில் அதிகமாக புழக்க மாக இருக்கிற நாமக்கல் பகுதியில் அடிக்கடி விபத்துகள் ஏற் படுவதால் இந்தத் திட்டம் மிகவும் அவசியமாகிறது. எனவே மத்திய அரசுடன் பேசி இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே தொடங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்த அரசு வந்தவுடனேயே இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இன்றைக்கு உடனடியாக நில ஆர்ஜிதம் சம்பந்தமாக 50 லட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்

1991 செப்டம்பர் 23]

பட்டு ஒப்புதலுக்காக அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. இதி லிருந்தே புரட்சித் தலைவி அரசு எவ்வளவு தூரம் வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே உடனடியாக முயற்சிகள் இதில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பரந்தாமன்

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற வழிச் சாலைகள் அமைக்கும் போது, குறிப்பிட்ட காலத்திற்கு அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்ற காலக் கெடு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக புறவழிச்சாலை என்று மட்டும் அல்ல, எந்த வேலையை அரசு எடுத்துக் கொண்டாலும் அதற்கு என்று ஒரு கால நிர்ணயத்தை வைத்துக் கொண்டுதான் அந்த வேலையைச் செய்கிறோம். ஆகவே எந்த வேலைக்கும் கால நிர்ணயம் என்பது ஏற்கனவே இருக்கிற நடைமுறை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 67. டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

67

இரால் மீன் வளர்த்தல்.

*1375 டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆழியார் அணைக்கட்டு அருகில் மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் இரால் மீன் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

ஆழியார் நீர்த்தேக்கம் மற்றும் அருகில் உள்ள நிலத்து அடி நீர் அமிலத்தன்மை சற்றுக் கூடுதலாக உள்ளதால், அங்கு நந்நீர் இரால் வளர்ப்பு அமைப்பது இலாபகரமாக இராது என தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினரால் கருதப்படுகிறது.